| O.S.No. 440/2019 | PW1: திருமதி. ரமா<br>க/பெ. திரு. ஜோதிகண்ணா | 14-02-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>5–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. இத்தாவாவினை நான்தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் எனது தாத்தா பரசுராம முதலியாருக்கு பாத்தியமான சொத்து ஆகும். தாவா சொத்து பரசுராம முதலியாருக்கு பாத்தியமானது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை பொருத்து எனது தந்தைக்கு எனது சித்தப்பா உலகநாதனுக்கும் ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தை பொருத்து எனது அத்தைகள் மாணிக்கம்மாள், அன்பழகி, மணிமேகலை, ரேணுகா ஆகியோர் சேர்ந்து எனது தந்தைக்கும், எனது சித்தப்பாவிற்கும் அவர்களுக்கு பாகம் வேண்டாம் என சொல்லி ஒரு அக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி தெரியும். தாவா சொத்தை பொருத்து எனது தந்தைக்கும், 5–ம் பிரதிவாதிக்கும் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு அது பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

3. தாவா சொத்தில் எனக்கு பங்கு வேண்டும் என்று சொல்லி எனது தந்தைக்கு எதிராக இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளேன். 2–ம் பிரதிவாதி அனிதா எனது அக்கா. இதே சொத்தின் மீது எனது அக்கா அனிதா எனக்கு எதிராக தாவா எண். 54/2014 வழக்கினை தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எனது தந்தை தாவா சொத்தானது எனது தந்தைக்கு தனிப்பட்ட உரிமை என்றும், அச்சொத்தினை பொருத்து மகள்கள் யாருக்கும் உரிமை இல்லை

என்றும், 5-ம் பிரதிவாதிக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றும் ஒரு எதிர்வழக்குரை போட்டுள்ள விஷயம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா எண். 54/2014 வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றால் சரிதான். 5-ம் பிரதிவாதி தாவா எண்.143/2019 வழக்கினை செய்யாறு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திதல் தாக்கல் செய்து அந்த வழக்கில் 5-ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

(5-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**